பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 05 திங்கட்கிழமை 17.02.2025 கதிர் 101

### இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சிக்கு எதிரான வழக்கு இப்போதைக்கு முடிவுக்கு வராது என்கிற நிலையில் கட்சியின் பொதுச் செயலாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ☞ 2

# ஐ.தே.கவுடனான பேச்சிலிருந்து விலகினார் ஐ.ம.ச. செயலாளர்

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசிய கட்சிக்கிடையிலான பேச்சுக்களைக் குழப்பும் வகையில் சிலர் திட்டமிட்டு செயற்படுகின்றனர். பேச்சில் ஈடுபட்டுள்ள எம்மை ரணில் விக்கிரமசிங்கவின் சகாக்கள் என்றும் விமர்சிக்கின்றனர். எனவே ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு கூடி இது தொடர்பில் உறுதியானதொரு தீர்மானத்தை எடுக்கும்வரை தான் பேச்சுவார்த்தைகளிலிருந்து விலகுகிறார் என்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அவர் கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்திக்கு இடையிலான பேச்சுக்கள் குறித்து பல்வேறு திரிபுபடுத்தப்பட்ட



கருத்துக்கள் ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் வெளியிடப்பட்டுள்ளன. ஜனவரியில் கூடிய இரு கட்சிகளினதும் செயற்குழுக்களில் இரு தரப்புகளுக்குமிடையில் பேச்சைத் தொடங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது.

இரு கட்சிகளும் ஒரே பாதையில் பயணிப்பதற்கான வழியை எவ்வாறு உருவாக்குவது மற்றும் இணக்கப்பாட்டை எட்டுவது என்பதற்கான வழிவகைகளைக் கண்டறிவதே எமக்கு வழங்கப்பட்ட நிகழ்ச்சி நிரலாகும். நீண்டகால இணக்கப்பாட்டை எட்டும் நோக்கிலேயே பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டன. ஐக்கிய மக்கள் சக்தியின் தனித்துவத்தன்மையை பாதுகாத்துக் கொண்டு பேச்சுக்களை முன்னெடுக்குமாறு கட்சி தலைவர் சஜித் பிரேமதாச ஆலோசனை வழங்கியிருந்தார்.

எவ்வாறிருப்பினும் தற்போது பேச்சுவார்த்தைகளில் பங்கேற்காதவர்களால் கூடபல்வேறு கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. எனவே இது ☞ 2

## முதல் பட்ஜெட் இன்று

புதிய ஆளும்தரப்பின் முதலாவது வரவு செலவுத் திட்டம் இன்று காலை 10.30 மணிக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால் வரவு செலவுத் திட்டம் சமர்பிக்கப்படும்.

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் பெப்ரவரி 18 முதல் 25 வரை 7 நாட்களுக்கு நடைபெறவுள்ளது. இதன் பின்னர் பெப்ரவரி 25 மாலை 6 மணிக்கு வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கான வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் குழுநிலை மீதான விவாதம் பெப்ரவரி 27 முதல் மார்ச் மாதம் 21 வரை 4 சனிக்கிழமைகள் உட்பட 19 நாட்களுக்கு நடைபெறவுள்ளது. அதன் பின்னர், ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் மூன்றாம் வாசிப்பை மார்ச் 21 மாலை 6 மணிக்கு ☞ 8

## படையினரின் ‘பாஸ்போர்ட்’களை ஒப்படைக்கக் கோரி அறிவிப்பு

மேஜர் பதவிக்குக் கீழே உள்ள அனைத்து இராணுவத்தினரின் கடவுச்சீட்டுக்களையும் சம்பந்தப்பட்ட படைப்பிரிவுகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி இராணுவத் தலைமையகம் ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

நிர்வாக விடயம் ☞ 8

# ஆளும்தரப்புத் தன்னிடமிருக்கும் தீர்வை காலந்தாழ்த்தாது முன்வைக்கவேண்டும்

### தமிழ் அரசுக் கட்சி வலியுறுத்து

ஆளும்தரப்பு தம்மிடம் இருப்பதாகச் சொல்லுகின்ற அரசியல் தீர்வைக் காலந் தாழ்த்தாது முன்வைக்கவேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

”தமிழ் மக்களின் பிரதான கட்சியான தமிழ் அரசுக்கட்சியின் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான நிலைப்பாடு சகலருக்கும் தெரியும். காலாகாலமாக இந்தக் கட்சி ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து அரசியற் தீர்வு எவ்வாறானதாக இருக்கவேண்டும் என்று சுட்டிக் காட்டி வந்துள்ளது. எனவே எங்களது நிலைப்பாட்டை புதிதாக முன்வைக்க வேண்டிய அவசியம் கிடையாது. நாங்கள் ஆளும்தரப்பிடம் வலிந்து கோருவது நீங்கள் மக்களுக்காக வழங்குவதென வாக்குறுதி அளித்த உங்களிடத்தில் இருக்கின்றது என்று சொல்லப்படுகின்ற அரசியல் தீர்வைக் காலம்தாழ்த்தாது முன்வைக்கவேண்டும் என்பதைத்தான்” என்றார் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன்.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் நேற்று இடம்பெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின்னர் ☞ 2

## பணவீக்கம் உயரும்

தேசிய மற்றும் பூகோள காரணிகளால் 2025 ஆம் ஆண்டு இரண்டாம் காலாண்டில் பணவீக்கம் உயர்வடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்வரும் மூன்று மாதங்கள் முதல் நீண்ட காலப்பகுதிக்கு பணவீக்கம் கட்டம் கட்டமாக உயர்வடையும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. ☞ 8

## ஜெய்சங்கர் - விஜித ஹேரத் மஸ்கட்டில் சந்தித்துப் பேச்சு



இந்திய அயலுறவு அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கையின் அயலுறவு, வெளிநாட்டுவேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோர் மஸ்கட்டில் நடைபெற்றுவரும் 8ஆவது இந்தியப் பெருங்கடல் மாநாட்டின் ஒரு பகுதியாக பேச்சு நடத்தியுள்ளனர். ☞ 8

## வலுச் சக்தி அமைச்சர் ஜயகொடி இந்திய தூதரை சந்தித்துப் பேச்சு

வலுச் சக்தி அமைச்சர் குமார ஜயகொடி இலங்கைக்கான இந்திய உயர்ஆணையர் சந்தோஷ் ஜாவுக்கும் இடையே சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் உள்ள இந்திய உயர்ஆணையத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வலுசக்தி அமைச்சருக்கும் இந்திய உயர்ஆணையருக்கும் இடையிலான கலந்துரையாடலின்போது இரு நாடுகளுக்கும் இடையிலான வலுசக்தி கூட்டாண்மையின் பல்வேறு அம்சங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டதாக இந்திய உயர்ஆணையரகயம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில், இந்திய உயர்ஆணையர் சந்தோஷ் ஜா மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா இடையேயும் சமீபத்தில் ஒரு சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே தற்போதுள்ள உறவுகளை மேலும் வலுப்படுத்தபரந்த ☞ 8

## ரணில் – ஜெய்சங்கரும் மஸ்கட்டில் சந்தித்தனர்

எட்டாவது இந்தியப் பெருங்கடல் மாநாட்டின் போது, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் இந்தியாவின் அயலுறவு அமைச்சர் ஜெய்சங்கரும் சந்தித்துப் பேசியுள்ளனர்.

பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பு குறித்து ☞ 2

## பிரதமரை சந்தித்துப் பேச நேற்று முல்லைத்தீவில் அனுமதி மறுப்பு

முல்லைத்தீவிற்கு விஜயம் செய்த பிரதமர் ஹரிணி அமரசூரிய அவர்களை சந்திப்பதற்காக பல்வேறுபட்ட தரப்பினரும் வருகை தந்திருந்த போதிலும் அவர்களை நேரடியாக சந்தித்து கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பம் நேற்று மறுக்கப்பட்டிருந்தது.

மீன்பிடித்துறை அமைச்சர் சந்திரசேகரனின் அறிவுறுத்தலுக்கு அமைவாக பிரதமரை சந்திக்க வந்த கேப்பாபிலவு மக்கள் அவரை சந்திக்க முடியாது ஏமாற்றமடைந்தனர். இது தொடர்பான காணி உரிமையாளர்களில் ஒருவரான இந்திராணி செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தார். ☞ 8

### யாழ். பல்கலை மீதான வழக்கைத் தொடர்ந்து

## மாணவன் மீதான தடை அவசர அவசரமாக நீக்கம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக 4ஆம் வருட சட்டத்துறை மாணவனுக்கு விதிக்கப்பட்ட வகுப்புத்தடை அவசர அவரசமாக நீக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினுள் நடைபெற்ற மூன்று வெவ்வேறு விடயங்களில் 09 மாணவர்களுக்கு வகுப்புத்தடைகள் விதிக்கப்பட்டன. இந்த வகுப்புத் தடை குறித்து, மாணவர் ஒன்றியத்தின் செயலாளராக அண்மைக் காலம்வரை செயலாற்றிய சட்ட பீட மாணவனான சிவகஜனால் சமூகஊடகங்களில் விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டன. ☞ 8

## வெப்பமான காலநிலை தொடரும் சாத்தியம்

கடந்த சில நாட்களாக நாட்டில் நிலவும் வெப்பமான காலநிலை மேலும் தொடரக்கூடும் என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

வெளியில், வீதிகளில் மற்றும் நெல்வயல்களில் வேலை செய்பவர்கள் தற்போதைய நிலைமை குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். மக்கள் அதிக தண்ணீர் குடிக்கவும், இயற்கை திரவங்களை அதிகமாக உட்கொள்ளவும் அறிவுறுத்தியுள்ளனர்.

நாட்டில் நிலவும் வெப்பமான வானிலை ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சுமந்திரன் தெரிவாகியுள்ளார்.

தமிழ்அரசுக்கட்சியின்நாடாளுமன்றக்குழுத் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிறிதரன், கட்சியின் நாடாளுமன்றக் குழு ஊடகப்பேச்சாளரும் மட்டக்களப்புமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிறிநேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் ஆகியோர் இந்த நியமனத்தைக் கடுமையாக எதிர்தனர். இது புதிதில்லை. கட்சித் தலைவர் பதவிக்கான போட்டியிலும் சுமந்திரனை தமிழினத் துரோகியாக விளித்து பரப்புரை செய்தவர்கள் இவர்கள், எனவே இவர்கள் சுமந்திரனை ஆதரித்தால்தான் அதில் ஆச்சரியம் இருக்கமுடியும். இப்போதைக்கு மிகவும் பலவீனமான இந்த அணியால் சுமந்திரனின் நியமனத்தைத் தடுக்க முடியவில்லை.

சுமந்திரனுக்குப் பதிலாக கட்சியின் நிர்வாகச் செயலாளர் குலநாயகத்தை அந்தப் பதவிக்கு நியமிக்கலாம் என்று பேசிப் பார்த்தார் சிறீதரன். ஆனால், யாப்புப்படி கட்சியின் துணைச் செயலாளரைத்தான் மத்திய குழுவால் செயலாளராக நியமிக்க முடியும் என்று சுட்டிக்காட்டிய தலைவர் சிவஞானம்அந்தயோசனையைநிராகரித்தார். அதேபோன்று கட்சியின் தலைவராக சிவஞானம் நியமிக்கப்பட்டதால் சிறீதரனை கட்சியின் சிரேஸ்ட துணைத் தலைவர் பதவிக்கு நியமிக்கலாம் என்ற யோசனையும் முன்வைக்கப்பட்டது. ஆனால், தான் இன்னும் கட்சிக்குப் பதில் தலைவரே என்றும் அதனால் கட்சியில் தனது சிரேஸ்ட துணைத் தலைவர் பதவி வெறிதாக்கப்படவில்லை என்றும் சிவஞானம் சுட்டிக்காட்டியதை அடுத்து அந்த யோசனையும் கைவிடப்பட்டது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று களுவாஞ்சிக்குடியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனின் அலுவலகத்தில் காலை பத்து மணிக்கு கட்சியின் தலைவர் சிவஞானம் தலைமையில் தொடங்கியது.

### உள்ளூராட்சி தேர்தல்

இதனையடுத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பில் நீண்ட நேரம் ஆராயப்பட்டது. அச்சமயத்தில் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பிலும், தனியாகப் போட்டியிடுவது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், கட்சியின் மாவட்டக்குழுக்களின் தீர்மானத்துக்கு அமைவாகஅந்தவிடயத்தினைமுன்னெடுப்பது என்றும், பொதுப்படையில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சிதேர்தலில்தனித்தேபோட்டியிடுவது என்றும்தேவையேற்படுகின்றபோது ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து கூட்டாட்சியை முன்னெடுப்பதற்கான கலந்துரையாடல்களைச் செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

உள்ளுராட்சி மன்றங்களுக்கான தேர்தலில்மாவட்டக்குழுக்களின்தீர்மானங்கள் மற்றும் முன்மொழிவுகள் உட்பட புதிய வேட்பாளர்களை உள்ளீர்த்தல் ஆகிய விடயங்களை முன்னெடுப்பதற்கு கட்சியின் தலைமைக்கும், பொதுச்செயலாளருக்கும் அங்கீகாரம் அளிப்பதற்கும் மத்திய குழு அனுமதி வழங்கியுள்ளது.

மொத்தத்தில் தமிழ் அரசுக் கட்சியின் முதுகில் சவாரி விடும் மற்றைய கட்சிகளின் எண்ணத்தில்முழுதாகமண்ணைள்ளிப்போட்டு மூடிவிட்டது தமிழ் அரசுக் கட்சி.

### ஒழுக்காற்றுகுழு நியமனங்கள்

இதனையடுத்து கட்சியின் ஒழுக்காற்றுக் குழுவிற்கான புதிய அங்கத்துவங்கள் வழங்கப்பட்டன. ஒழுக்காற்றுக்குழுவில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்பும் வகையில் சேயோன் மற்றும், சரவணபவன் ஆகியோருக்கு அங்கத்துவங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதேநேரம், கட்சியின் ஒழுக்காற்றுக்குழுவின் தலைவராக குருகுலராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்றைய முடிவுகளின் படி கட்சியின் ஒழுக்காற்றுகுழுவில்கனகசபாபதி, குகபாலன், துரைராஜசிங்கம், சிறிநேசன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, சேயோன், மட்டக்களப்பு சரவணபவன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்

### கஜேந்திரகுமாரின் கோரிக்கை

புதிய அரசமைப்பு விடயத்தினை கையாள்வதற்காக தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்ற கஜேந்திரகுமாரின் எழுத்துமூலமான கோரிக்கை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்ட நிலையில், ஆளும்தரப்பு புதிய அரசமைப்பு தொடர்பில் எவ்விதமான முன்னெடுப்புக்களையும் மேற்கொள்ளாதிருக்கும் தருணத்தில் அதுகுறித்துபேசுவதானதுஅர்த்தபூர்வமானதாக இருக்காது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஆளும்தரப்பு புதிய அரசமைப்பு சம்பந்தமான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றபோது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் நியமிக்கப்பட்டுள்ள விடயத்தினை கையாள்வதற்கான ஏழுவர் கொண்ட குழுவானது கட்சியின் முன்மொழிவு வரைவின் அடிப்படையில் ஏனைய தரப்புக்களுடனும் பேச்சுக்களை முன்னெடுக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

அதுவரையில் தமிழ் அரசுக் கட்சி ஆளும்தரப்பு புதிய அரசமைப்பு விடயத்தினை முன்னெடுப்பதற்கான உரிய அழுத்தங்களை தொடர்ச்சியாக வழங்கும் என்றும் விசேடமாக பொருளாதாரப் பிரச்சினைகளுக்க தீர்வு காண்பதாக இருந்தால் தேசிய இனப்பிரச்சினைக்குதீர்வுகாணப்படவேண்டும் என்றவிடயத்தினை இடித்துரைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கட்சியின் அரசமைப்பு விடயங்களை கையாள்வதற்காக நியமிக்கப்பட்ட ஏழுவர் கொண்ட குழுவில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் வெளியேறியுள்ள நிலையில் அவரது வெற்றிடத்துக்காக மட்டக்களப்பு மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் சிறிநேசன் நியமிக்கப்பட்டார்.

### மாவையின் இறுதிச் சடங்கு

கட்சியின்மறைந்தமூத்ததலைவர்மாவை சேனாதிராசாவின் இறுதிச் சடங்கின்போது மயாணத்தில் காட்சிப்படுத்தப்பட்ட கட்சியின் 18மத்தியகுழுஉறுப்பினர்களின்புகைப்படங்கள் தாங்கியபதாகைதொடர்பில்கட்சியின்தலைவர் என்ற வகையில் சிவஞானம் முறைப்பாடு அளித்துள்ள நிலையில், அச்செயற்பாட்டின் பின்னணியில் உள்ளவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான தொடர்ச்சியாக செயற்படுவதெனவும், ஏனைய உறுப்பினர்களும் தனித்தனியாகவும், கூட்டாகவும் முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும் என்றும் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களுக்கும் மத்திய குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

................................

சண்டே லீடர் ஆசிரியரும் பத்திரிகையாளருமானலசந்தவிக்ரமதுங்கவின்படுகொலை தொடர்பானவிசாரணையைஷானிஅபேசேகர உள்ளிட்ட புலனாய்வாளர்கள் குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் வைக்க ஆளும்தரப்பால் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, லசந்த கொலை உட்பட சர்ச்சைக்குரிய கொலைகளின் விசாரணை, பல்வேறு காரணங்களுக்காக குற்றப் புலனாய்வுத் துறையின் விசாரணை நடவடிக்கைகளில் இருந்து முன்னர் நீக்கப்பட்டவர் ஷானி. இந்த வழக்குகளில் இராணுவம் மற்றும் கடற்படை அதிகாரிகளின் தொடர்புகள் குறித்தே அவர் விசாரணை செய்து, நீண்ட தூரம் முன்னேறி இருந்தார். இதனால் கோட்டாபய காலத்தில் அவர் இலக்குவைக்கப்பட்டு, நாட்டைவிட்டு வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டார். ஷானி மட்டுமன்றி வேறு பல புலனாய்வு அதிகாரிகளுக்கும் இந்த நிலையே ஏற்பட்டது. இப்போது அந்த அதிகாரிகளின் கண்காணிப்பு வழிநடத்திலின் கிழேயே இந்த விசாரணைகளை ஒப்படைக்க திட்டமிடப்பட்டுள்ளது

ரக்பி வீரர் வசிம் தாஜுதீன் கொலை, கொழும்பை பிரதேசத்தைச் சேர்ந்த 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை, பாரதலக்ஸ்மன்பிரேமச்சந்திர கொலை, ஊடகவியலாளர் லசந்தவிக்ரமதுங்க கொலை மற்றும் ரத்துபஸ்வல துப்பாக்கிச் சூடு தொடர்பான விசாரணைகள் ஷானி அபேசேகரவின் மேற்பார்வையின் கீழேயே ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றன.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஆளும்தரப்புத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் களுவாஞ்சிக்குடியில் இடம்பெற்றது. இங்குமுக்கியமாகஉள்ளூராட்சி மன்றத் தேர்தலை எவ்வாறு சந்திப்பது என்பது பற்றி நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது. கடந்த ஓரிரு வருடங்களுக்கு முன்னர் இதே இடத்தில் இடம்பெற்ற கூட்டத்தின்போது இந்தத் தேர்தல் முறையின் கீழ் தனித்தனியாகப் போட்டியிடுவது பற்றி உத்தேச தீர்மானமொன்றை மற்றைய கட்சிகளுக்குத் தெரியப்படுத்தியிருந்தோம். அந்தஅடிப்படையில்எதிர்வரும்உள்ளூராட்சித் தேர்தலிலும் தனித்துப் போட்டியிட்டாலும் நாங்கள் சேர்ந்து ஆட்சி அமைப்பதற்கான புரிந்துணர்வொன்றைமற்றையகட்சிகளுடன் ஏற்படுத்த முடியுமா என்ற விதத்திலும் ஆராய்ந்தோம்.

எல்லா மாவட்டங்களிலும் நிலைமை ஒரே மாத்திரியாக இருக்காது. அந்த நிலைமைகளுக்கு ஏற்றவாறு அந்ததந்த மாவட்டங்களில் சற்று வித்தியாசமான அணுகுமுறைகளைக் கையாள முடியும் என்றும் தீர்மானித்திருக்கிறோம். அது சம்மந்தமாக மற்றைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைமைத்துவங்களோடு பேச்சு நடத்துவதற்கு தலைவருக்கும், செயலாளருக்கும் கட்சி அனுமதியை வழங்கியிருக்கின்றது. இது தொடர்பில் நாங்கள் மேலும்கூட வேண்டுமாக இருந்தால் அரசியற் குழுவினுடாக தீர்மானங்களை மேற்கொள்ளலாம் என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் சம்மந்தமாகப் பேசப்பட்டது. பலருக்கெதிராக ஒழுக்காற்றுநடவடிக்கைகள்எடுக்கப்பட்டுள்ளன. சிலர்ஏற்கனவேகட்சியில்இருந்துநீக்கப்பட்டும் இருக்கின்றார்கள். கட்சிக்கு எதிராக வெவ்வேறு அரசியல் அணிகளில் போட்டியிட்டவர்கள் தொடர்பிலான அறிக்கை செயலாளரூடாகச் சேகரிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் ஒவ்வெரு மாவட்டத்திற்கும் அந்தப் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், கட்சியில் இருந்து நீக்கப்படுவதற்கான ஏதுக்கள் இருப்பின் அவர்களும் கட்சியில் இருந்து நீக்கப்படுவார்கள்.

கட்சிக்கு எதிராகவும் கட்சி முடிவுகளுக்கு எதிராகவும் பரப்புரை செய்தவர்கள் சம்மந்தமான ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் முழுமையாக முடிக்கப்படவில்லை. பலருக்கு விளக்கம் கோரல் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் ஒழுக்காற்று குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதனூடாக நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் எமது கட்சித் தலைவருக்குக் கொடுத்த கடிதம் வாசித்துக் காட்டப்பட்டது. இது சம்மந்தமாக கடந்த மத்திய குழுவிலே ஏழு போர் கொண்ட குழுவினைத் தீர்மானித்திருந்தோம் இன்று அந்தக் குழுவிலே சிறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சாணக்கியன் இந்தக் குழுவில் இருந்து விலகுகிறார் என்று அறிவித்து சிறிநேசனின் பெயரை முன்மொழிந்திருந்தார். அந்த ஏழு பேர் கொண்ட குழு மத்திய குழுக்கூட்டத்தின் பின்னர் கூடி முன்னணியின் கடிதம் குறித்து ஆராய்ந்தது.

தமிழ் மக்களுக்கு எவ்வாறான அரசியல் திருத்தம் வேண்டும் என்பது தங்களுக்குத் தெரியும், தங்களுக்கு மக்கள் ஆணை இருப்பதாக இந்த ஆளும்தரப்புச் சொல்லிக் கொண்டிருக்கின்றது. நாடு முழுவதும் அவர்களுக்கு மக்கள் ஆணை வழங்கியிருக்கின்றார்கள். வடக்கிலும் தமிழ் மக்கள் அவர்களுக்கு ஆணை வழங்கியிருப்பதாகச் சொல்லுகின்றார்கள். ஆனால் அண்மைக் காலமாக அரசாங்கத்தின் முக்கிய பிரதிநிதிகள், குறிப்பாக அமைச்சரவைப் பேச்சாளர் நலிந்த ஜயதிஸ்ஸ தற்போது பொருளாதாரப்பிரச்சனைதான் முக்கியமானது, அதனையே நாங்கள் கவனிப்போம். அரசமைப்புபற்றிபின்னர்பார்த்தக்கொள்வோம் என்று கூறி வருகின்றார். வேறு சிலர் மூன்று வருடங்களின் பின்பே அரசமைப்பு பற்றி பேசலாம் என்று சொல்லியிருக்கின்றார்கள்.

இதனை நாங்கள் ஏற்றுக்கொள்ளவே முடியாது. இந்த நாட்டின் பிரதான பிரச்சினை தமிழ்த் தேசியப் பிரச்சினை. வேறு எந்தப் பிரச்சினை சம்மந்தமாகவும் இந்த நாட்டிலே முப்பது ஆண்டுகள் போர் நடைபெறவில்லை. பொருளாதாரப் பிரச்சினைக்கு அடிகோலியாக இருப்பதும் இந்தத் தமிழ்த் தேசியப் பிரச்சினையே. எனவே பொருளாதாரப் பிரச்சினையை முதலில் கவனிப்போம் என்று ஆளும்தரப்பினர் சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவே முடியாது.

நாங்கள் ஆளும்தரப்பிடம் வலிந்து கோருவது நீங்கள் மக்களுக்காக வழங்குவதென வாக்குறுதி அளித்த உங்களிடத்தில் இருக்கின்றது என்று சொல்லுகின்ற அரசியற் தீர்வைக் காலம் தாழ்த்தாது முதலில் மக்களுக்கு முன்வைக்க வேண்டும். உங்களிடத்தில் அரசியற் தீர்வு இருக்கின்றதென்று சொல்லுகின்றீர்கள். அதனை காலம் தாழ்த்தாது நீங்கள் முன்வையுங்கள்.

தமிழ் மக்களின் பிரதான கட்சியான தமிழ் அரசுக் கட்சியின் இனப்பிரச்சனை தீர்வு தொடர்பான நிலைப்பாடு சகலருக்கும் தெரியும். காலாகாலமாக இந்தக் கட்சி ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து அரசியற் தீர்வு எவ்வாறானதாக இருக்கவேண்டும் என்றும் சுட்டிக் காட்டி வந்துள்ளது. எனவே இதில் நாங்கள் எங்களது நிலைப்பாட்டை புதிதாக முன்வைக்க வேண்டிய அவசியம் கிடையாது. இதனைத் தீர்ப்பதற்கு எங்களுக்கு தெரியும் என்று சொல்லுகின்ற ஆளும்தரப்பு காலம் தாழ்த்தாது தங்களிடம் இருக்கும் வரைபை முன்வைக்க வேண்டும் என்பதே எங்களது அழுத்தமான வேண்டுகோள் என்று தெரிவித்தார்.

## ரணில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது அவதானம் செலுத்தியதாகவும், இந்தியப்பெருங்கடல்பிராந்தியத்தில்இருதரப்பு மற்றும் பலதரப்பு கூட்டாண்மைகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை இந்தச் சந்திப்பு வலியுறுத்தியதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடல்சார் கூட்டாண்மை மாநாட்டிற்காக தற்போது ஓமானில் உள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கடல்சார் பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் பிராந்திய ஸ்திரத்தன்மை தொடர்பான முக்கியமான பிரச்சினைகளை கையாள உள்ளார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வெப்பமான .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக பாடசாலை மாணவர்கள் செயற்படும் விதத்தை உன்னிப்பாக அவதானித்து வருவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் இன்றைய தினம் கலந்துரையாடல் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள் விளையாட்டுப் பயிற்சிகள் உள்ளிட்ட செயற்பாடுகளில் ஈடுபடும்போது அதிக சூரிய ஒளியில் இருப்பதனை தவிர்க்குமாறும் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெள கோரியுள்ளார்.

இலங்கை உட்பட உலகின் மத்திய ரேகை பகுதியில் உள்ள பல நாடுகளில் தற்போதைய நாட்களில் அதிக வெப்பநிலை நிலவுகிறது. அதன்படி, ஆசியா, ஆபிரிக்கா மற்றும்அவுஸ்திரேலியாஆகியகண்டங்களில் உள்ள நாடுகளும் அதிக வெப்பநிலையினால் பாதிக்கப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், கொழும்பு, காலி, இரத்தினபுரி, திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார் மற்றும் அனுராதபுரம் ஆகிய பகுதிகளில் வெப்பநிலையானது எதிர்வரும் நாட்களில் 32 முதல் 36 பாகை செல்சியஸ் வரை காணப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக வெப்பநிலையினால் உடல் வெப்பநிலை அதிகரித்து பல உடல்நல பிரச்சினைகளை ஏற்படக்கூடும் என்பதால் அதிகளவில் நீர், இயற்கை பானங்களை பருகுமாறுசுகாதாரஅதிகாரிகள்கோரியுள்ளனர்.

## ஐ.தே.கவுடனான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் மீண்டும் ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுவைக் கூட்டி கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் உறுதியானதொரு தீர்மானம் எடுக்கப்படும் வரையில் நான் பேச்சுக்களில் பங்கேற்க மாட்டேன்.

அடுத்த செயற்குழு கூட்டத்திலும்,

தொடர்ச்சி 8 ம் பக்கம்.....

# பூமியை நாசம் செய்தால் விளைவுகள் எமது வாழ்க்கையையே பாதிக்குமாம்

## பொதுச்சுகாதாரப் பரிசோதகர் உரை

(சுபேசன்)

பூமியை நாம் நாசம் செய்தால் அதன்விளைவுகள் எமது வாழ்க்கையைப் பாதிக்கும் என பூநகரிப் பிரதேச மேற்பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தெரிவித்துள்ளார்.

ஜெயபுரம் மீனவ சங்கங்கங்களின் சமாசத்தில் இடம்பெற்ற விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; -

பூமியே எமது இல்லம். அதை எமது விரும்பத்தகாத செயற்பாடுகளால் நாசம் செய்தால் அதன் விளைவு எமது வாழ்கையைப் பாதிக்கும். எனவே சூழல்



மாசுபாட்டை குறைக்கும் விதமாக எமது நாளாந்த செயற்பாடுகள் அமையவேண்டும்.

நிலம், நீர், வளி மற்றும் உயிரங்கிகளும் - அவற்றுக்கிடையிலான இடைத்தொடர்புகளும் இணைந்தே சூழற்தொகுதி அமைகின்றது. பூமியே உயிர்ப்பான ஒரு கோளாகும். இந்த அரியபொக்கிசத்தை நாசமாக்குவது நாம் எம்மையே அழிப்பதற்கு சமமாகும்.

காடுகளும், கடலும் வளிமண்டல வாயுச் சமநிலையைப்பேண உதவுகின்றன. இதை கட்டுப்பாடின்றிய தொழிற்சாலைக் கழிவு வெளியேற்றம், சூழலுடன் பொலித்தீன், பிளாஸ்டிக் சேருதல் மற்றும் காபன் அடிச்சுவடு எனப்படும் ஒவ்வொரு உற்பத்தியும் நுகர்வோரை அடையும் வரையான காபன் வெளியேற்றம், அதிகரித்த தகனம் என்பன இந்தச் சமநிலையைப் பாதிக்கின்றன.

அதிகரித்த காபனீரொக்சைட் போன்ற பச்சைவீட்டு வாயு வெளியேற்றங்களால் பூமி வெப்பமாகி உயிரங்கிகளின் வாழ்க்கைக்கோலம் பாதிக்கப்படுவதோடு துருவப் பனிப்பாறைகள் உருகி கடல்மட்டம் உயர்ந்து தரைவாழிடம் அற்றுப்போகின்றது.

பொலித்தீன் ,பிளாஸ்டிக் பொருள்கள் நேரடியாகவும், அவற்றின் நுண்ணிய பிளாஸ்டிக் கூறுகள் மறைமுகமாகவும் புற்றுநோய் மற்றும் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளை ஏற்படுத்துவதோடு சுற்றாடலுக்குப் பெறுமதியான ஆமை ,பறவைகள், விலங்குகள் போன்ற உயிரங்கிகள் இதனை உண்பதால் மடிந்தும் போகின்றன.

எனவே காபன் உமிழ்வதைக் குறைத்தல் , பொலித்தீன் தகனம் மற்றும் கண்டபடி கழிவுகள் அகற்றலைத் தவிர்த்தல், பொலித்தீன் பாவனையை விலக்குதல், குறைத்தல், மீள்பயன்படுத்தல், மீள்சுழற்சி செய்தல் என்பவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

உக்காத பொலித்தீன், பிளாஸ்டிக் பொருள்களை கடற்கரையிலிருந்து அகற்றுவது மட்டுமல்ல அவற்றை பாதுகாப்பானஇறுதி அகற்றலுக்குட்படுத்துவதற்கான திட்டங்களையும்இடுவதேபுத்திசாலித்தனமானதாகும்.

தகனம் மற்றும் காடழித்தலால் வளிமண்டல காபனீரொக்சைட் அதிகரித்து அது கடல் நீரில் கலந்து கடல் அமிலம் உருவாவதால் கடல்வாழ் உயிரங்கிகள் அழிவடையும்.

எனவே வளங்களைச் சுரண்டி பூமியை அலங்கோலப்படுத்தாது பூமியைப்பாதுகாப்பது பற்றிய அறிவும், விழிப்புணர்வும் அதனூடான நடத்தையும் ஏற்படவேண்டும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.



# பிடியளவு கமநிலத்துக்கு திட்டம் முத்து நகர் பகுதியில் ஆரம்பம்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட உப்புவெளி கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்களத்துக்குட்பட்ட முத்து நகர் பகுதியில் 'பிடியளவு கமநிலத்துக்கு' எனும் திட்டத்தின் கீழ் இலங்கை முழுவதும் வினைத்திறன் மிக்க விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்குடன் அரசாங்கத்தின் தேசிய வேலை திட்டத்தின் ஒரு பகுதியாக சனிக்கிழமை முத்து நகர் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

உப்பு வெளி கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்களத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தர்சாநந்தன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வைஉப்புவெளிகமநலசேவைகள்திணைக்களம் மற்றும் முத்து நகர் பகுதியில் உள்ள முத்து நகர் விவசாய சம்மேளனம், தகரவெட்டுவான் விவசாய சம்மேளனம், மத்திய வெளி விவசாய சம்மேளனம், அம்மன் குள விவசாய ஆகிய நான்கு விவசாய சம்மேளனங்களின் ஒருங்கிணைப்பில் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பயிரிடப்படாத வயல் நிலங்கள், மேட்டு நிலங்கள் போன்றவற்றை விவசாய செய்கையில் ஈடுபடுவதற்கான ஒரு ஊக்குவிப்பு திட்டமாக இது காணப்படுகிறது. இத் திட்டம் மூலம் உணவால் பாதுகாக்கப்பட்டதொரு தேசத்சை உருவாக்கும் பொருட்டும் சகல கமக்காரர்கள், சொந்த காணி உரிமையாளர்கள், இருப்பாட்சியாளர்கள் ஆகியோர்கள் இதன் மூலம் பயனடைவதுடன் தேசத்தின் பசியை போக்குவதற்கும் நாளைய நாளில் செழிப்பான விளைச்சலை பெற்றுக் கொள்வதற்கும் இது உறுதுணையாக அமையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் போது விவசாயிகளுக்கு குறித்த சட்ட திட்டங்கள் அடங்கிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்க அனுமதி கடிதங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

உணவால் பாதுகாக்கப்பட்டதொரு தேசத்தை உருவாக்கும் பொருட்டு உறங்கும் கமத்தொழில் நிலங்களை விழிப்புறச் செய்யும் தேசிய செயற்பாடாக இது காணப்படுகிறது.

உங்களுக்கு சொந்தமான வயற்காணி மேட்டுக் காணி தேசிய சொத்தாகும் பயிரிடப்படாதுள்ள சகல வயல் மேட்டு நிலங்களை வினைத்திறனாக துரிதமாக பயிரிடுதல் தங்களுக்குரிய தேசிய பொறுப்பாகும் என கமநில அபிவிருத்தி திணைக்களத்தின் முக்கியதொரு திட்டமாக சிறந்து விளங்குகிறது.

குறித்த நிகழ்வின் போது உரையாற்றிய உப்புவெளி கமநல சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் தர்சானந்தன் -

வெற்றுக் காணிகளாக காணப்படும் விவசாய மற்றும் மேட்டு நிலக் காணிகள் கட்டாயமாக விவசாய செய்கைகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும் இல்லாத பட்சத்தில் பயிரிடப்படாத சந்தர்ப்பங்களில் சட்ட ரீதியாக அரசுடைமையாக்கம் செய்யப்படலாம். எந்தவொரு ஏனைய நிறுவனங்களின் பிரச்சினைகள் காணி தொடர்பில் காணப்படுமாயின் எமது அலுவலகர்களை சந்தித்து தீர்வை பெறலாம். இவ்வாறான திட்டம் ஊடாக அரசாங்கத்தின் தேசிய உணவு உற்பத்தி துறையில் ஒரு பங்குதாரர்களாக மாறுங்கள் தொடர்ந்தும் உங்களது விவசாய செய்கை மேட்டு நிலப் பயிர்ச் செய்கைகளை அதிகரித்து விவசாயத்தில் ஈடுபடுங்கள் என விவசாயிகளிடத்தில் மேலும் கோரிக்கை விடுத்தார்.

இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் சட்டம் மற்றும் சேவை கிளைக்குரிய உத்தியோகத்தர் கே.நேமிநாதன் உட்பட விவசாய போதனாசிரியர்கள், விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கடும் சவால்களின் மத்தியில் வரவு செலவுத் திட்டம் மீதான எதிர்பார்ப்பு

எண்ணற்ற வாக்குறுதிகள் மற்றும் சவால்களுக்கு மத்தியில், தேசிய மக்கள் சக்தி இன்று தனது முதல் வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்ய உள்ளது. மக்களின் பெருகிவரும் எதிர்பார்ப்புகள், குறிப்பாக பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு, 2025 வரவு செலவுத் திட்டம் மிகவும் எதிர்பார்க்கப்படும் ஒன்றாக மாறியுள்ளது. இந்த எதிர்பார்ப்புக்களை ஆளும்தரப்பு பூர்த்தி செய்யவில்லை என்றால் அது ஆளும்தரப்புக்கு மிகப் பெரும் பின்னடைவாக மாறும்.

கொவிட்–19 தொற்றுநோயின் நடுத்தர கால தாக்கங்கள் மற்றும் பல தசாப்த கால மோசமான நிர்வாகத்தால் மோசமடைந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை இன்னும் மீண்டு வருகிறது. பொருளாதாரம் மேம்படுவது குறித்த அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்கள் இருந்தபோதிலும், வாழ்க்கைச் செலவு மற்றும் வறுமை அதிகமாகவே உள்ளது, மேலும் மக்கள் தங்கள் எதிர்காலம் குறித்துச் சந்தேகத்துடன் உள்ளனர். இந்தச் சூழலில், நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் தற்போதைய பொருளாதார மீட்பு செயல்முறையை சமநிலைப்படுத்துதல் ஆகிய இரண்டு அம்சங்களை சமநிலைப்படுத்தும் வரவு செலவுத் திட்டத்தை வழங்கவேண்டிய கட்டாயம் ஆளும்தரப்புக்கு உண்டு. ஏனெனில் அதற்கான வாக்குறுதியை அது தேர்தலின்போது வழங்கியிருந்தது.

இந்த ஆளும்தரப்பு புதிய சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துமா அல்லது பன்னாட்டு நாணய நிதியத்தின் (IMF) நிவாரணப் பொதியைத் தொடருமா என்பதைப் பார்க்க சர்வதேச மற்றும் உள்ளூர் அவதானிகள் ஆர்வமாக உள்ளனர். எதிர்க்கட்சிகளும்கூட அதனைக் கூர்ந்து நோக்கி வருகின்றன. இது முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வளர்ப்பதற்கு மிக முக்கியமானது. நாட்டில் பொருளாதார மீட்சியைத் துரிதப்படுத்தவும் அவசியமானது. இந்த விடயங்களில் ஆளும்தரப்பு கொஞ்சம் சறுக்கினாலும் அதிகளவில் விமர்சனங்களையும் எதிர்வினைகளையும் சந்திக்கவேண்டி வரும்.

நாணய நிதிய நிபந்தனைப்படி அரச வருவாய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) குறைந்தது ரூ. 15.5% ஐ எட்ட வேண்டும், அதாவது அது சுமார் ரூ. 5.5 டிரில்லியனாக அதிகரிக்கப்படவேண்டும். இந்த இலக்குக்கு சந்தேகத்திற்கு இடமின்றி நிதி ஒழுக்கம் தேவைப்படுகிறது. அதற்காக ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களை இந்த ஆளும்தரப்பு அப்படியே நிறைவேற்றுமா என்கிற கேள்வி உண்டு. நாணய நிதியத்துடன் எட்டிய ஒப்பந்தங்களுக்கும் எதிராகச் சென்றால், அது நாட்டை ஒரு கடினமான சூழ்நிலைக்குத் தள்ளும் என்பதாலும் இந்த வரவு செலவுத் திட்டம் ஆளும்தரப்பின் எதிர்காலத்தை மட்டுமன்றி இலங்கையின் எதிர்காலத்தையும் குறித்து நிற்கின்றது.

இரண்டாவது படியாக, வாழ்க்கைச் செலவைக் குறைப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைக்குறைப்பு, கிடைக்கும்தன்மை மற்றும் அணுகலை உறுதிசெய்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். நாடு அதன் பொருளாதாரத்தை மீட்டெடுக்க வேண்டுமானால், தொழிலாளர் மற்றும் தொழில்துறை உற்பத்தித்திறனை மேம்படுத்துவதும் மிகவும் முக்கியமானது. அதே நேரத்தில், ஆளும்தரப்பு வரவு செலுவுத் திட்டத்தின் மூலம் சம்பள உயர்வு வழங்கப்படும் என்ற வாக்குறுதியையும் திருப்திகரமாக நிறைவேற்ற வேண்டியுள்ளது.

இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற ஆளும்தரப்பு இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் முடிவு செய்தாலும், அரச துறைப் பணியாளர்களின் உழைப்பு திறம்பட பயன்படுத்தப்படுவதையும் பொருளாதாரத்திற்கு அது வினைத்திறனுடன் பங்களிப்பதையும் உறுதி செய்வதற்கான ஒரு பொறிமுறையை ஆளும்தரப்பு முன்மொழிய வேண்டியிருக்கும். இல்லையேல் அரச பணியாளர்களுக்கான சம்பள உயர்வு விழலுக்கு இறைந்த நீராகிவிடும். உற்பத்தித்திறன் மற்றும் தொழிலாளர் வளர்ச்சியை இலக்காகக் கொண்ட குறிப்பிட்ட பொருளாதார சீர்திருத்தங்களையும் ஆளும்தரப்பு அறிமுகப்படுத்த வேண்டியிருக்கிறது.

பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து சில ஆண்டுகளில், பல பெரிய முதலீட்டாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர், சிலர் இலங்கையை தளமாகக் கொண்ட திட்டங்களில் முதலீடு செய்வதில் உள்ள சிரமங்களைச் சுட்டிக்காட்டியுள்ளனர். வரவு செலவுத் திட்டம் இவற்றையும் சமாளிக்க வேண்டியிருக்கும். இல்லையேல் பொருளாதார வளர்ச்சியைச் சாத்தியமாக்குவது சிரமமானது.

சமூக நலனை மேம்படுத்துதல் மற்றும் உறுதி செய்தல் என்று வரும்போது, தற்போதுள்ள சமூக நலத் திட்டங்களை மேம்படுத்தி நெறிப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. நிவாரணம் வழங்குவதில் அதிக இலக்கு அணுகுமுறைகள் இருக்க வேண்டும். அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான விலைக் கட்டுப்பாட்டு வழிமுறைகள் சில குழுக்களுக்கு மட்டுமே பயனளிக்கின்றன, எனவே, உணவு மாஃபியா கையாளப்படுவதை உறுதிசெய்ய ஆளும்தரப்பு மிகவும் புதுமையான வழிமுறைகளுக்கு கவனம் செலுத்த வேண்டும். மேலும், ஒட்டுமொத்த பொருளாதார இலக்குகளை அடைய வரி வசூல் செயல்முறையும் வெற்றிகரமாக, நெறிப்படுத்தப்பட்டு பலப்படுத்தப்பட வேண்டும். இவை அனைத்திற்கும் ஒரு சரியான வரவு செலவுத் திட்டம் தேவைப்படுகிறது, இது சரியாக வரைவு செய்யப்படுவது மட்டுமல்லாமல், திறம்படச் செயல்படுத்தப்படுகிறது.

# வேலையற்ற பட்டதாரிகள் காரைதீவுவில் போராட்டம்

(அஷ்ரப்கான்)

அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் வேலைவாய்ப்புக்கோரி கவனவீர்ப்புப் போராட்ட மொன்றை சனிக்கிழமை முன்னெடுத்திருந்தனர்.









இந்தப் போராட்டம், அம்பாறை மாவட்டம், காரைதீவு சந்திக்கருகில் ஆரம்பமானதுடன், பல்வேறு சுலோகங்களை ஏந்தி பட்டதாரிகள் கொளுத்தும் வெயிலில் கவனவீர்ப்புப் போராட்டத்தை அமைதியாக முன்னெடுத்தனர்.

இதன் போது, இதுவரை வேலைவாய்ப்பு தொடர்பில் எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லையெனவும் வெளிப்படையாக பட்டதாரிகளின் நிலைமை குறித்து தகவல்களை வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனகவனவீர்ப்புப்போராட்டத்தை மேற்கொண்டவர்கள் ஊடகங்களிடம் தெரிவித்தனர்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டமானது அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க உப தலைவர் சதாசிவம் யதுராஜ் தலைமையில் இடம்பெற்றதுடன், குறித்த போராட்டத்திற்கு ஆதரவாக ஏனைய வேலையற்ற பட்டதாரிகள் தமது தொழில் உரிமையை வலியுறுத்தும் வகையிலான பல்வேறு கோசங்களையும் எழுப்பி உரிய தரப்பினர் தீர்வைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, குறித்த போராட்டத்திற்கு காரைதீவு பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி ஆர் எஸ்.ஜெகத் வருகை தந்துபார்வையிட்டதுடன், பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இளைஞர் சேவைகள் மன்றத்தால் ‘கிளீன் சிறிலங்கா’ வேலைத்திட்டம்

இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் கீழ் செயற்பட்டுவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் ‘கிளின் சிறிலங்கா’வேலைத்திட்டம் நாடு முழுவதும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.





அந்த வகையில், கிளிநொச்சி மாவட்டத்தின் ஏ 9 வீதியில் நீதிமன்ற கட்டடம் தொடக்கம் கரடிபோக்கு சந்தி வரை வீதியில் அமைக்கப்பட்டுள்ள பூச்சாடிகளை மீள்புனருத்தானம் செய்வதற்கான பணிகள் சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டன.

இந்தப் பணியில் இளைஞர், யுவதிகள் பங்கு கொண்டனர். 113



காலைக்கதிர் Kalaikkathir

# நிந்தவூரில் 2 ஆண்கள் கைது திடீர் சோதனைகளின்போது

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

ஒருதொகைஐஸ்போதைப் பொருள், இலத்திரனியல் தராசு, ரூபா 8,93,840 பணத்துடன்பெண்ஒருவரும், ஒரு தொகை கேரளக் கஞ்சாவுடன் ஆண் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

கல்முனைஉதவிப்பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அஸார் தலைமையில் அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கை சனிக்கிழமை நள்ளிரவு வேளையில் இடம்பெற்றது.

இச்சோதனை நடவடிக்கையில் கல்முனை, சம்மாந்துறை, சவளக்கடை, பெரியநீலாவணை, சாய்ந்த மருது, காரைதீவு போன்ற பொலிஸ் நிலையங்களில் கடமை புரியும் பொலிஸார் மற்றும் காரைதீவு இராணுவத்தினர் உள்ளிட்ட பாதுகாப்பு படையினரால் போதைப்பொருள் விற்பனை மற்றும்பாவனைசெய்பவரின் வீடுகள் சோதனை செய்யப்பட்டன.

திடீர் சுற்றி வளைப்பின் போது 29 வயது மதிக்கத்தக்க பெண், 22 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணின் வீட்டினை சோதனை செய்த வேளையில், ஒரு தொகை ஐஸ் போதைப் பொருள், போதைப் பொருள்களை நிறுக்க பயன்படும் இலத்திரனியல் தராசு ஒன்றும், போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டதாக சந்தேகப்படும் ரூபா 8,93,840 (எட்டு லட்சத்தி தொண்ணூற்றி மூவாயிரத்து எண்ணூற்றி நாற்பது) பணமும் மீட்கப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்ட ஆணின்வீட்டினை சோதனை செய்த வேளையில், ஒரு தொகை கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த கைது நடவடிக்கையானது, கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அஸாரின்பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சுற்றுலா விஸாவில் கல்முனைக்கு வந்து நகைவிற்ற இந்தியப் பெணுக்கு பிணை

(பாறுக் ஷிஹான்)

சுற்றுலா விஸாவில் வந்து நகைத் தொழிலில் ஈடுபட்ட இந்திய பெண் வியாபாரிக்கு கல்முனை நீதிவான் நீதிமன்று பிணை வழங்க உத்தரவிட்டுள்ளது.

நகைத் தொழில் மற்றும் நகைக் கடைகளை நடத்துபவர்கள் மற்றும் விசேட பொலிஸ் பிரிவினர் ஆகியோரிடம் இருந்து கிடைக்கபெற்ற முறைப்பாட்டிற்கமைய சோதனை நடவடிக்கை மேற்கொண்ட கல்முனை தலைமையக பல்வேறு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கிறீன் பீல்ட் வீட்டுத்திட்டம் அருகில் வைத்து சந்தேகத்திற்கிடமாக நடமாடிய பெண்ணைக் கைதுசெய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் இந்திய தமிழ்நாட்டை சேர்ந்த 48 வயதுடைய அழகச்சாமி தமிழ்ச்செல்வி ஆவார். அத்துடன் அவர் வசம் இருந்து மாதிரி நகைகளுடன் ஏனைய சில பொருன்களும் பொலிஸாரினால் மீட்கப்பட்டிருந்தன.

இவ்வாறுகைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை அன்றைய தினம் கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் அப்துல் ரசீட் முஹம்மது கலீல் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது ஒரு லட்சம் ரூபா சரீரப்பிணையில் விடுதலை செய்யப்பட்டதுடன் எதிர்வரும் திங்கட்கிழமை வரை வழக்கு மறுதவணை இடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ்விடயம் குறித்து கல்முனை தலைமையக பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் வழிகாட்டலில் பல்வேறு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் குழுவினர் தொடர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சமீப காலமாக சுற்றுலா விஸாவில் இலங்கை வரும் இந்திய வியாபாரிகள் வீடு வீடாகச் சென்று தங்கநகைகளை விற்பனை செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் மாதாந்தத் தவணை மற்றும் கடன் அடிப்படையிலும் நகை விற்பனையில் ஈடுபடுகின்றனர்.

இதன் காரணமாக மிகுந்த சிரமங்களின் மத்தியில் பல லட்சம் ரூபாவில் உள்ளூரில் முதலீடு செய்து நகைத் தொழிலில் ஈடுபடும் வர்த்தகர்கள் பெரும் நஷ்டங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# நாடாளுமன்ற உறுப்பினர் ஆதம்பாவாவுக்கு கல்முனை சாஹிராவில் கௌரவமளிப்பு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் அபிவிருத்தி குழுத் தலைவரும்அரசியல்பேரவைஉறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ. ஆதம்பாவாவை வரவேற்று வாழ்த்தி கௌரவிக்கும் நிகழ்வு சனிக்கிழமை அவரது தாய்ப்பாடசாலையான கல்முனை கமுஃகமுஃ சாஹிரா தேசிய பாடசாலையில் இடம்பெற்றது.

கல்லூரியின் முதல்வர் எம். ஐ. ஜாபீர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ .ஆதம்பாவாவிற்கு பாடசாலை சமூகத்தினரால் பொன்னாடை போத்தி நினைவு சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர்கள்,ஆசிரியர்கள் மற்றும் கல்வி



சாரா உத்யோகத்தர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.




# இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தருடன் அட்டாளைச்சேனை இளங்கலை பட்டதாரிகள் சங்கம் சந்திப்பு

(நூருல் ஹுதா உமர்)

அட்டாளைச்சேனை இளங்கலை பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் முஹம்மட் ஹம்தான் முனைவர் மற்றும் அதன் கணக்காய்வாளர் செய்யத் முஷர்ரப் மௌலானா ஆகியோர் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத்தைச் சந்தித்திருந்தனர்.

மேற்படி இச்சந்திப்பில் இப்பிரதேச மாணவர்களுக்கான கல்விசார் ஒத்துழைப்புக்கள் மற்றும் சமூக மேம்பாடுகள் குறித்து கலந்துரையாடினர். பல்கலைக்கழகத்திற்கும் அதனை அண்டிய சமூகங்களுக்கும் பயனளிக்கும் வகையில் பலதரப்பு கூட்டாண்மையை நிறுவுவதில் இந்த சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டது.



இப்பிரதேச இளங்கலை மாணவர்களின் தன்னக திறன்கள் மற்றும் செயல் திறன்களை மேம்படுத்துதல், பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை உள்ளீர்ப்பு செய்வதின் நடைமுறைகள் தொடர்பில் சமூக விழிப்புணர்வை அதிகரித்தல் மற்றும் சமூகத்தில் உள்ள மாணவர்களுக்கு வளங்கள் மற்றும் கல்விக்கான ஒத்துழைப்புகளை விருத்தி செய்தல் போன்ற முக்கிய கலந்துரையாடல் விடயங்களாக அமைந்திருந்தன.

# கல்முனையில் 500 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள்

(அப்ராஸ்)

ரஹ்மத் பவுண்டேசன் பவுண்டேசன் அமைப்பினால் இலவசமாக மூக்குக்கண்ணாடிகள் விநியோகம் கல்முனையில் சனிக்கிழமை இடம்பெற்றன.

கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் ஏற்பாட்டில், வை.எம்.எம்.ஏ.பேரவை மற்றும் கல்முனை ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் பங்களிப்புடன் இலவச மூக்குக்கண்ணாடிகள் மற்றும் கண் வில்லைகள் வழங்கும் நிகழ்வு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொருளாளரும், கல்முனை மாநகர முன்னாள்







பிரதி முதல்வரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூரின் தலைமையில் கல்முனை காசிம் வீதியில் அமைந்துள்ள ரஹ்மத் பவுண்டேசன் அலுவலகத்தில் சுமார் 500 இற்கு மேற்பட்டவர்களுக்கு இலங்கையைச் சேர்ந்தவர் கனடாவில் வாழும் சீனியா தாசிம் அனுசரணையில் கண்பரிசோதனை செய்யப்பட்டு மூக்குக்கண்ணாடிகள் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன.

இதன் போது கல்முனை பிரதேச செயலாளர் டி.எம். எம்.அன்ஸார், கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரம்சீன், வை.எம்.எம்.ஏ தலைவி பவசா தாஹா, கல்முனை ஆதார வைத்தியசாலை கண் சத்திர சிகிச்சை நிபுணர் சிறீஸன், கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் கண் பிரிவுக்குப் பொறுப்பான வைத்தியர் உவைஸ், ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் முகாமைத்துவ பணிப்பாளர் வைத்தியர் சனா, ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் முகாமையாளர் றிஷாட் வஹாப், ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள், அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் தாதிமார்கள், வைத்தியர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.









# 'கிளீன் சிறிலங்கா' வேலைத்திட்டம் அம்பாறையில் அங்குரார்ப்பணம்

## பல தரப்பினரும் பங்கேற்பு

(பாறுக் ஷிஹான்)

அரசின் கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பல்வேறு தரப்பினரின் பங்கேற்புடன் ஆரம்பமானது.

அம்பாறை மாவட்டத்தின் பாணமை தொடக்கம் பெரியநீலாவணை வரையான சுமார் 110 கிலோ மீற்றர் நீளமான கடற்கரையோரத்தை சுத்தம் செய்ய கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட நிலையில் நேற்று காலை ஆரம்பமானது. இதன் போது இவ்வேலைத்திட்டத்தை பொத்துவில் அறுகம்பையில் அம்பாறை மாவட்டச் செயலாளர் சிந்தக அபேவிக்ரம ஆரம்பித்து வைத்தார்.

இதன் அடிப்படையில் கல்முனை பிரதேச செயலகம், கல்முனை வடக்கு பிரதேச செயலகம், சாய்ந்தமருது பிரதேச செயலகம், காரைதீவு பிரதேச செயலகம், நிந்தவூர் பிரதேச செயலகம், நாவிதன்வெளி பிரதேச செயலகம், சம்மாந்துறை பிரதேச செயலகம், கல்முனை மாநகர சபை, காரைதீவு பிரதேச சபை, நிந்தவூர் பிரதேச சபை, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பெரிய நீலாவணை, சாய்ந்தமருது ,காரைதீவு ,நிந்தவூர், நிலையங்கள் , கல்முனை தலைமையக பொலிஸ், கடற்படையினர், விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர், பாடசாலை மாணவர்கள் என பல தரப்பினரும் பங்கேற்றனர்.

இதன் போது கடற் கரையோரத்தை சுத்தம் செய்வது தொடர்பான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.









காலைக்கதிர் Kalaikkathir

# ’அழகிய கடற்கரை கவர்ச்சிகரமான சுற்றுலாத்தளம்’ தொனிப் பொருளுடன் சிறீலங்கா வேலைத்திட்டம்

(முகமட் இம்றான்)

ஜனாதிபதி அவர்களின் கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண கடற்கரையோரத்தை சுத்தப்படுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பம்.

திருகோணமலையில் அமைந்துள்ள மான் பூங்கா கடற்கரை பகுதியில் (சங்கமித்தா அருகில்) நேற்று (ஞாயிற்றுக்கிழமை) ஆரம்பமானது.

’அழகிய கடற்கரை மற்றும் கவர்ச்சிகரமான சுற்றுலாத்தளம்’ என்ற தொனிப்பொருளின் கீழ் கிழக்கு மாகாணம் முழுவதும் இந்த வேலைத்திட்டம் நேற்று நடைபெற்றது.

கிழக்கு மாகாணம் , திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையும் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சருமாகிய அருண் ஹேமச்சந்திரா திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார, கிழக்கு மாகாண சபையின் நிறுவனத் தலைவர்கள் மற்றும் ஊழியர்கள், இலங்கை பொலீஸ் மற்றும் பிற அரசு நிறுவனங்களின் ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வு வெருகல், மூதூர், கிண்ணியா, பட்டினமும் சூழலும், குச்சவெளி ஆகிய கரையோர பிரதேச செயலக பிரிவுகளில் அமைந்துள்ள 53 கடற்கரை பகுதிகளிலும் இவ்வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.









காலைக்கதிர் Kalaikkathir

## ஐ.தே.கவுடனான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகாமைத்துவக் குழு கூட்டத்திலும் நான் இது தொடர்பில் அறிவிக்கவுள்ளேன். எவரது பெயரையும் குறிப்பிட்டு நான் எதனையும் குறிப்பிடவிரும்பவில்லை. தற்போதுபேச்சுக்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. கட்சி ரீதியில் தீர்மானமொன்று எடுக்கப்பட்டால் அதற்கு அனைவரும் ஒற்றுமையுடனும் இணைக்கத்துடனும் செயற்படவேண்டும். அதனை விடுத்து முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வகையில் செயற்பட்டால் யாருக்கும் எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை.

கட்சி ரீதியில் இணக்கப்பாடு எட்டப்படாமல் பேச்சைமுன்னெடுப்பதுபிரயோசனமற்றதாகும். கட்சிக்கான பணிகளில் ஈடுபடும் எம்மைச்சிலர் துரோகிகளைப் போன்று சித்தரிக்கின்றனர். பேச்சு முன்னெடுப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் நியமிக்கப்பட்டுள்ள ஆறு உறுப்பினர்களில் பொதுச் செயலாளர் மற்றும் தேசிய அமைப்பாளரான என் மீது மாத்திரம் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. எனவே உறுதியானதொரு தீர்மானம் எடுக்கப்படும் வரை நான் பேச்சிலிருந்து விலகுகின்றேன் என்றார்.

## ஜெய்சங்கர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"அமைச்சர் விஜிதா ஹேரத்துடனான உரையாடல் பயனுள்ளதாக அமைந்தது. எங்கள் பரந்த அளவிலான ஒத்துழைப்பைப் பற்றி அவருடன் ஆய்வு செய்தேன். இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் முன்னேற்றத்திற்கு உறுதியளித்துள்ளோம்" என்று ஜெய்சங்கர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

எட்டாவது இந்தியப் பெருங்கடல் மாநாடு ஓமன் நாட்டின் மஸ்கட் நகரில் 'கடல்சார் கூட்டாண்மையின் புதிய எல்லைகளுக்கு பயணம்' என்ற தொனிப்பொருளில் நடைபெறுகிறது.

இதில். கடல்சார் கூட்டாண்மைகளை மேம்படுத்துதல், வர்த்தக இணைப்புகளை மேம்படுத்துதல், நிலையான வளர்ச்சியை ஆதரித்தல் மற்றும் கடல்சார் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதோடு கடல்பயணங்களின் சுதந்திரத்தை உறுதி செய்தல், துறைமுக பாதுகாப்பு மற்றும் நிர்வாகத்தை மேம்படுத்த நவீன தொழில்நுட்பத்திலிருந்து பயனடைதல் ஆகிய விடயங்களையும் கொண்டுள்ளது.

இந்தியப் பெருங்கடல் மாநாடு என்பது இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள நாடுகளுக்கான ஒரு முதன்மை ஆலோசனை மன்றமாகும், இது இந்திய வெளியுறவு அமைச்சகத்தால், இந்தியா அறக்கட்டளையுடன் இணைந்து ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வலுச் சக்தி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துப் பரிமாற்றம் நடந்ததாக இந்திய உயர்ஆணையம் சந்திப்புத் தொடர்பில் தெரிவித்திருந்தது.

இந்தியாவின் பெருநிறுவனங்களில் ஒன்றான அதானி நிறுவனம் இந்த நாட்டில் செயல்படுத்த முன்மொழிந்த புதுப்பிக்கத்த மின்சார உற்பத்தித் திட்டங்களிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ள பின்னணியில் இந்தச் சந்திப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

இதற்கிடையில், இலங்கை ஆளும்தரப்பு அதானி நிறுவனம் விலகிய திட்டங்கள் தொடர்பாக மீண்டும் அந்த நிறுவனத்துடன் பேச்சு நடத்தத் தயாராகி வருவதாக முன்னணி சோசலிசக் கட்சி குறிப்பிட்டுள்ளது. கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய அதன் உறுப்பினர் துமிந்த நாகமுவ இதனைத் தெரிவித்தார்.

## முதல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் நாளை முன்வைக்கப்படும் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் குறித்து நாட்டின் நிர்மானத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் அவதானம் செலுத்தி வருகின்றனர்.

மேலும், தொழிற்சாலைகளுக்கான செலவுக் குறைப்பு முதன்மையாகக் குறிப்பிடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில்

கல்விக்காக ஒதுக்கப்படும் தொகை 6 சதவீதமாக அதிகரிக்கப்படவேண்டும் என பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

## படையினரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் வருண கமகே தெரிவித்தார்.

இருப்பினும், தனிப்பட்ட தேவைகளுக்காக தொடர்புடைய பிரிவுகளுக்கு அறிவிப்பதன் ஊடாக வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களை மீண்டும் பெற முடியும் என்றும் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

## மாணவன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனையடுத்து, தன் மீது பாரதூரமான அவதூறை ஏற்படுத்தும் வகையில் ஊடகங்களுக்கு சிவகஜன் செவ்வி வழங்கினார் என கலைப்பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் துணைவேந்தரிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவையின் முடிவை எதிர்த்து பேராசிரியர் ரகுராம் தனது கலைப் பீடாதிபதி பதவியில் இருந்து விலகுகிறார் என்று அறிவித்த மறுநாளே குறித்த முறைப்பாடு வழங்கப்பட்டது. இந்த முறைப்பாட்டின் அடிப்படையில், ஜனவரி 27 பல்கலைக்கழகத் துணைவேந்தரால் சட்டத்துறை மாணவன் சிவகஜனுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டது.

இந்த வகுப்புத் தடை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கலைப்பீடாதி ரகுராம் முன்வைத்த முறைப்பாட்டுக்கு அமைய விதிக்கப்பட்டுள்ளது என்று துணைவேந்தரால் மாணவனுக்கு வழங்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த வகுப்புத்தடையைச் சவாலுக்குட்படுத்தி யாழ்.பல்கலை துணைவேந்தர் சிறிசற்குணராஜா, கலைப்பீடாதிபதி, மாணவர் ஒழுக்காற்று அதிகாரி ஆகியோருக்கு எதிராக கொழும்பு உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு சட்டத்துறை மாணவன் சிவகஜனால் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட செய்தி வெளியான மறுநாளே அவசர அவசரமாக மாணவன் மீதான வகுப்புத்தடை நீக்கப்பட்டுள்ளதாக மாணவனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வகுப்புத்தடை நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டாலும், சட்ட விதிமுறைகளை மீறி மாணவனுக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டமைக்கு எதிராகவும் , இழப்பீடு கோரியும் வழக்கினை தொடர்ந்து முன்னெடுக்கவுள்ளதாக மாணவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரதமரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் அமைச்சர் சந்திரசேகரனின் அழைப்பின் பேரில் காணி விடுவிப்புத் தொடர்பாகப் பேச வந்திருந்த போதிலும் ஒரு நிமிடம்கூட எமக்கு ஒதுக்கப்படவில்லை. இதனால் காணி விடுவிப்பை வலியுறுத்தி தொடர் போராட்டத்தில் ஈடுபட போகின்றோம் என்றும் தெரிவித்துள்ளார்.

## பணவீக்கம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய வங்கியின் நிதி கொள்கை தரப்படுத்தலுக்கமைய அரச செலவுகள் மற்றும் சம்பள அதிகரிப்பு, தனிப்பட்ட பாவனைக்கான வாகன இறக்குமதி மீதான தடையை தளர்த்தல், ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைதல், ஆகிய காரணிகளுடன் பூகோள மட்டத்தில் பொருட்களின் விலை உயர்வடைந்தமை, பண்டிகை காலத்தின் போது ஏற்படும் உயரளவிலான கேள்வி, எதிர்வரும் மூன்று மாதங்கள் முதல் நீண்ட காலப்பகுதிக்கு பணவீக்கம் கட்டம் கட்டமாக உயர்வடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வறட்சி மற்றும் வெள்ளப்பெருக்கு அடிக்கடி ஏற்படும் அவதானம் காணப்படுகின்ற நிலையில், பூகோள மட்டத்தில் உணவு பொருட்களின் விலை கட்டம் கட்டமாக உயர்வடையும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்துக்கான நிதி கொள்கை அறிக்கையை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது.

2022 மற்றும் 2023 ஆகிய காலப்பகுதிகளில் உயர்மட்டத்தில் காணப்பட்ட பணவீக்கம் 2024 ஆம் ஆண்டு சடுதியாக குறைவடைந்தது. இருப்பினும் 2025 ஆம் ஆண்டு இரண்டாம் காலாண்டில் பணவீக்கம் உயர்வடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒப்பீட்டளவில் 2025 ஆம் ஆண்டு மூன்றாம் காலாண்டில் பணவீக்கம் 5 சதவீதமளவில் உயர்வடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அது 2026 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் பணவீக்கத்தின் சதவீதத்தில் இருந்து 2 சதவீதமளவில் மேலும் உயர்வடையும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில், 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தெரிவு செய்யப்பட்ட பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமையால் பணவீக்கத்தின் தளம்பல் நிலை தொடர்பில் மத்திய வங்கி அவதானம் செலுத்தியுள்ளது.

கடந்த ஆண்டுக்கு இணையாக இந்த ஆண்டு ஜனவரி மாதம் குடியிருப்பு, நீர், சமையல் எரிவாயு, ஏனைய எரிபொருள் பயன்பாட்டுக்கான பணவீக்கம் நூற்றுக்கு 3.68 சதவீதத்தால் அதாவது 6794.18 ரூபாவால் குறைவடைந்துள்ளது. இருப்பினும் வீட்டு வாடகை உயர்வடைந்துள்ளது.

உணவு மற்றும் மதுபானம் அல்லாத பானங்களின் பணவீக்கம் நூற்றுக்கு 0.08 அதாவது 1544.77 ரூபாவால் குறைவடைந்துள்ளது. அரிசிக்கான செலவு 666.66 ரூபாவாலும், தேங்காய்க்கான செலவு 1537.81 ரூபாவாலும், தேங்காய் எண்ணெய்க்கான செலவு 297.65 ரூபாவாலும் உயர்வடைந்துள்ளது.

போக்குவரத்துக்குரிய பணவீக்கம் -0.50 அதாவது 925.97 ரூபாவால் குறைவடைந்துள்ளதுடன், வாகன பராமரிப்புக்கான செலவு 201.39 ரூபாவால் உயர்வடைந்துள்ளதாக நிதி கொள்கை அறிக்கையில் பட்டியல்படுத்தப்பட்டுள்ளது.

நிதி கொள்கையில் தரப்படுத்தலுக்கமைய அரச செலவுகள் மற்றும் சம்பள அதிகரிப்பு, தனிப்பட்ட பாவனைக்கான வாகன இறக்குமதி மீதான தடையை தளர்த்தல், ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைதல், ஆகிய காரணிகளுடன் பூகோள மட்டத்தில் பொருட்களின் விலை உயர்வடைந்தமை, பண்டிகை காலத்தின் போது ஏற்படும் உயரளவிலான கேள்வி, எதிர்வரும் மூன்று மாதங்கள் முதல் நீண்ட காலப்பகுதிக்கு பணவீக்கம் கட்டம் கட்டமாக உயர்வடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரேன்ட் கணிய எண்ணெய்யின் விலையின் சாதாரண வீதம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு குறைவடைவதுடன், 2026 ஆம் ஆண்டு மேலும் குறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வறட்சி மற்றும் வெள்ளப்பெருக்கு அடிக்கடி ஏற்படும் அவதானம் காணப்படுகின்ற நிலையில், பூகோள மட்டத்தில் உணவு பொருட்களின் விலை கட்டம் கட்டமாக உயர்வடையும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் வெளிநாட்டு கையிருப்புக்கு மிகவும் தீர்மானமிக்க துறைகளாக காணப்படும் பூகோள வர்த்தகம், முதலீடு, மீண்டெழும் செலவுகள், பொருளாதார வளர்ச்சி மற்றும் பணவீக்கம் ஆகியவற்றில் மாற்றம் ஏற்படுவதற்கு ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் புதிய அரசாங்கத்தின் கொள்கைகள் செல்வாக்கு செலுத்தும் என்று மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியின் பொருளாதார கொள்கை மாற்றத்தினால் இறக்குமதிக்கான தீர்வை வரி உயர்வடையும். 2024 ஆம் ஆண்டு இலங்கை ரூபாவின் பெறுமதி அமெரிக்க டொலருக்கு நிகராக 10.7 சதவீதத்தால் உயர்வடைந்திருந்தாலும், இந்த ஆண்டு முதல் காலப்பகுதியில் அதில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. 2025.01.28 ஆம் திகதி ரூபாவின் பெறுமதி நூற்றுக்கு 2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# திருமலையில் மாற்றுத்திறனாளிகளுடன் பகிர்வோம் மகிழ்வோம் நிகழ்ச்சிகள்

திருகோணமலை சேகர மெத்தடிஸ்ட் தேவாலயங்கள் சார்பில் பகிர்வோம் மகிழ்வோம் நிகழ்ச்சி சனிக்கிழமை திருகோணமலை டொக்யார்ட் மெதடிஸ்ட் தேவாலயத்தில் அருட்திரு. தேவகுமார் தலைமைமையில் நடைபெற்றது.

இந்த ஆண்டு இந்த மனிதாபிமான நிகழ்வுக்காக, மிகவும் பாதிக்கப்பட்ட ஏழை மாற்றுத் திறனாளிகளைத் தேர்ந்தெடுத்தோம். திருகோணமலை சேகர மெத்தடிஸ்ட் திருச்சபையின் ஒவ்வொரு உறுப்பினர்களும், இந்த ஆண்டு மனிதாபிமான நிகழ்வுக்காக, ஜனவரி 2024 இருந்து சுமார் ரூபா 2 லட்சம் பணத்தை சேமித்தார்கள்.

திருகோணமலை சேகர மெத்தடிஸ்ட் திருச்சபை உறுப்பினர்கள் மற்றும் அருட்பணியாளர்கள் இந்த மனிதாபிமான நிகழ்வில் கலந்து கொண்டு, 20 ஏழை மாற்றுத்திறனாளிகளுக்கு உலர் உணவு மற்றும் உடைகளை அளித்து சிறப்பித்தார்கள்.







# செயலமர்வு

(ஹமீட்)

கிறிசலிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட சனசமூக நிலையங்களை உள்ளடக்கிய மாவட்ட போரத்தின் உறுப்பினர்களுக்கான விசேட பயிற்சி செயலமர்வின் முதலாம் கட்டம் சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீமின் பங்குபற்றுதலுடன் ஆரம்பித்து வைக்கப்பட்ட இச்செயலமர்வின் வளவாளராக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.பார்த்தீபன் கலந்து கொண்டார்.

சனசமூக நிலையங்களில் நல்லாட்சியும் தலைமைத்துவமும் எனும் தலைப்பில் இடம்பெற்ற இச்செயலமர்வில் சுமார் 35 இற்கும் மேற்பட்ட சனசமூக நிலைய மாவட்ட போரத்தின் உறுப்பினர்களும், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பங்குபற்றினர்.

சனசமூக நிலையங்களின் வினைத்திறனை அதிகரிப்பதற்காகவும், ஆட்சி முறையில் பெண்களின் வகிபாகத்தை அதிகரிப்பதற்காகவும் கடந்த மூன்று வருடங்களாக கிறிசலிஸ் நிறுவனம் அம்பாரை மாவட்டத்திலுள்ளமூன்றுபிரதேசசபைகளில்தமது செயல்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

அதன் ஒரு அங்கமாகவே சனசமூக நிலையங்களின் மாவட்ட போரத்தை உருவாக்கி அதன் உறுப்பினர்களுக்கு நல்லாட்சியும் தலைமைத்துவமும் எனும் தலைப்பில் நான்கு கட்ட செயலமர்வை ஆரம்பித்துள்ளது.

இச்செயலமர்வின் நான்கு கட்டங்களுக்கும் பிரதான வளவாளராக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.பார்த்தீபன் அவர்கள் செயற்படுவார். ஆத்தோடு கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் இடம்பெறவுள்ள இச்செயலமர்வுகளிற்கும் பார்த்தீபன் அவர்களே வளவாளராக செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

திருகோணமலை மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராக கடந்த பல வருடங்களாக சிறப்பாகக் கடமையாற்றி வந்த எஸ்.பார்த்தீபன் அவர்கள் இவ்வருட ஆரம்பம் முதல் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளராக இடமாற்றம் செய்யப்பட்டு கடமையாற்றி வருகின்றார்.

சனசமூக நிலையங்களில் நல்லாட்சியும் தலைமைத்துவமும் எனும் தலைப்பில் இன்று காலை 9.30 மணி தொடக்கம் மாலை4.00 மணிவரை இடம்பெற்ற செயலமர்வில் சனசமூக நிலையங்கள் மக்களின் தேவைகளை முதன்மைப்படுத்தி வெளிப்படைத்தன்மையாகவும், பொறுப்புக்கூறலுடனும் தமது செயற்பாடுகளை முன்னெடுக்கும்போதுதான் சிறந்த நிர்வாக ஆட்சியாக அதனைக் கொண்டு செல்லலாம் என்பதுடன் இளைஞர்கள், பெண்கள் நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான வழிவகைகளையும் ஏற்படுத்திக் கொடுக்கலாம் என்பது குறித்தும் வளவாளரால் விளக்கம் கொடுக்கப்பட்டது.

அத்தோடு, இச்செயலமர்வில் பங்குபற்றிய சனசமூக நிலைய மாவட்ட போரத்தின் உறுப்பினர்கள் அம்பாரை மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் பல கேள்விகளைத் தொடுத்ததுடன் தமது கருத்துக்களையும் முன்வைத்தனர்.

அதிலும் புறத்தோட்டம் சனசமூக நிலைத்தின் தலைவி யூ.எல்.சிப்லியா புதிய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம் அவர்களின் நியமனத்தை வாழ்த்தி பாராட்டிப் பேசியதுடன் தனிப்பட்ட காரணங்களுக்காக அதிகாரிகள் சனசமூக நிலையங்களின் சுதந்திரமான செயற்பாடுகளுக்கு தடையை ஏற்படுத்தாமல் வழிவிட வேண்டும் எனக்கேட்டுக் கொண்டதுடன் இவ்வாறான செயலமர்வுகளை ஒழுங்குபடுத்திய கிறிசலிஸ் நிறுவனத்திற்கும் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

இங்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம் அவர்கள் தம்மிடம் கேட்கப்பட்;ட கேள்விகளுக்கு மிகச்சிறப்பாக பதில் வழங்கியதுடன் பிரச்சினைகள் உள்ள சனசமூக நிலையங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி சிறந்த முடிவுகளை எடுப்பதற்காக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பணித்திருப்பதாகவும், சனசமூக நிலையங்கள் மக்களின் நலனுக்காக திறம்பட இங்கி தமது கட்டமைப்பை சரியான முறையில் வளர்த்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

சனசமூக நிலையங்களில் நல்லாட்சியும் தலைமைத்துவமும் எனும் இச்செயலமர்வை கிறிசலிஸ் நிறுவனத்தின் அம்பாரை மாவட்ட இணைப்பாளர் எஸ்.ரவிச்சந்திரன் ஒழுங்கு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



காலைக்கதிர்
Kalaikkathir

# வடக்கு ஏற்றுமதியாளர்கள் சம்மேளனத்துக்கு யாழ்ப்பாணத்தில் புதிய அலுவலகம் திறப்பு

வடமாகாணத்தின் ஏற்றுமதியாளர் சம்மேளனத்தின் அலுவலகம் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. யாழ். மாவட்டச் செயலகத்தின் முன்பாக அமைந்துள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கட்டடத்தில் இந்தப் புதிய அலுவலகம் இயங்கத் தொடங்கியுள்ளது.

திறப்பு விழாவில் கனேடிய உயர்ஆணையர், இந்திய துணைத் தூதுவர், வடமாகாண ஆளுநர், வடமாகாண பிரதம செயலாளர், யாழ். மாவட்ட பதில் செயலர் ஆகியோரும் பல உள்நாட்டு, வெளிநாட்டு பிரமுகர்களும் தொழில்முனைவோரும் கலந்துகொண்டனர். வடமாகாண ஏற்றுமதியாளர் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் ஏற்றுமதியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டிருந்தனர்.

திறப்புவிழாவின் சிறப்பம்சமாக கலந்துகொண்ட விருந்தினர்களுக்கு பல வகையான உள்ளூர் உற்பத்திப் பொருட்களும் பாரம்பரிய உணவுவகைகளும் பரிமாறப்பட்டன.

புதிய சம்மேளனத்தின் தலைவராக சுகந்தன், செயலாளராக தயாபரன், பொருளாளராக கனேத்திரன், உபதலைவராக ஸ்ரீகாந்தன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டு செயற்பட்டு வருகின்றனர்.

ஏற்றுமதியாளர்களின் இந்த இணைவுக்கு ஹற்றன் நஷனல் வங்கி, ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபை, வட பிராந்திய உற்பத்தியாளர் சம்மேளனங்கள் முதலானவை துணை நிற்கின்றன.

எமது பிரதேசத்தில் இருந்து செய்யப்படும் ஏற்றுமதியில் ஏற்படுகின்ற தடைகளைத் தகர்த்து குறுகிய காலப்பகுதியில் சரியான பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கான வழிகளை இந்த அமைப்பின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

வட மாகாணத்தில் உற்பத்தி செய்கின்ற தரம் வாய்ந்த பொருட்களையும் கலப்படம் அற்ற உண்மையான பொருட்களையும் ஏற்றுமதி செய்வதே இந்த அமைப்பின் நோக்கமாகும்.

வட மாகாண உற்பத்தி எனக்கூறி வெளிநாடுகளில் இருந்து போலியான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றமையை தடுத்து வடமாகணத்தின் உண்மையான உற்பத்தி பொருட்களை வெளிநாட்டில் உள்ள எமது மக்களுக்கு வழங்குவதும் இதன் நோக்கமாக உள்ளது.

அத்தோடு புதிய ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்களிற்குத் தேவையான தொடக்ககட்ட ஏற்பாடுகளுக்கான உதவிகள் மற்றும் உரிய ஏற்றுமதி ஆவணங்களைத் தயாரிப்பதற்கான அடிப்படை பயிற்சிகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகளையும் இந்த வடமாகண ஏற்றுமதியாளர் ஒற்றியம் மேற்கொள்ளவுள்ளது.
















# பாடசாலை பஸ் கொள்வனவுத் திட்டத்துக்காக ரூ. 8.5 லட்சம் வழங்கிய பழைய மாணவர்கள்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் நீண்ட நாள் தேவையாக காணப்படும் பாடசாலை பேருந்திற்காக பாடசாலை நிர்வாகத்தினால் பேருந்து கொள்வனவிற்கான நிதி திரட்டும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இச் செயல் திட்டத்திற்கு மேலும் வலு சேர்க்கும் விதமாக கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் 2003/2006 பழைய மாணவர் தொகுதியினர் 850,000.00 ரூபாய் நிதியுதவி வழங்கினார்.

இந்த நிதியை 2003ஃ2006 தொகுதி மாணவர் குழாமின் பிரதிநிதிகள் அதிபர் காரியாலயத்தில்கல்லூரியின்முதல்வர் எம்.ஐ.ஜாபிர் அவர்களிடம் கையளித்தார். இதன் போது நிதியுதவி அளித்த அத்தொகுதி பழைய மாணவர்களுக்கு அதிபரினால் பாராட்டு பத்திரம் வழங்கப்பட்டது. மேற்படி செயற்திட்டத்திற்காக நிதியுதவி வழங்கிய 2003/2006 மாணவ தொகுதியினருக்குநன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதாகஅதிபர்இதன்போது தெரிவித்தார்.












காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு பாடசாலை கிரிக்கெட் மேம்பாட்டுக்கு உபகரணங்கள்

## விளையாட்டுத்துறை அமைச்சு கையளிப்பு





வடமாகாண பாடசாலை கிரிக்கெட்டை மேம்படுத்தும் நோக்கில் இளைஞர் விவகார விளையாட்டுத் அமைச்சினால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட திறன் விருத்தி மண்டபத்தில் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே தலைமையில் நடைபெற்றது.

வடமாகாணத்தைச்சேர்ந்த 47 பாடசாலைகளுக்கு மூன்றுலட்சத்துஐம்பதாயிரம் ரூபாவிகிதம் குறித்த உபகரணம் வழங்கப்பட்டது.

# சட்டவிரோத மண் அகழ்வைப் படம்பிடித்த ஊடகவியலாளர் மீது தாக்குதல் முயற்சி

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம், கிழவன்குளம், பதினெட்டாம் போர், கொக்காவில் உள்ளிட்ட பகுதிகளில் ஏ-9 வீதியின் இரண்டு புறங்களிலும் உள்ள காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான மணல் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

அனுமதிப்பத்திரங்களை பெற்றவர்கள் அனுமதிப்பத்திர விதிமுறைகளை மீறியும் அனுமதி பத்திரங்கள் பெறப்படாதும் சட்டவிரோதமாக ஆற்றிலே உழவு இயந்திரங்களை விட்டு மணல்களை ஏற்றி காட்டுப்பகுதிகளிலேயே மணல்களை சேகரித்து காட்டுக்குள் டிப்பர் வாகனங்களை கொண்டு சென்று மண் ஏத்துகின்ற மரம் கடத்துகின்ற பல்வேறு குற்ற செயல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் பதினெட்டாம் போர் பகுதியில் சனிக்கிழமை நண்பகல் வேளையிலே ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் குறித்த விடயங்களை செய்தி சேகரிக்க சென்று இருந்தார்.

இதன்போது ஏ - 9 வீதியிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் காட்டு பகுதியில் மணல் கொண்டு வந்து குவிக்கப்படுவதை காணொளி பதிவு செய்து கொண்டிருந்தபோது என்.பி.எவ்.ஆர் 8429 மோட்டார் சைக்கிளில் வருகை தந்த இருவர் ஊடகவியலாளர் தவசீலன் அவர்களது ஒளிப்படகருவியை பறிக்க முற்பட்டதோடு ஊடகவியலாளர் மீது தாக்குதல் முயற்சி மேற்கொண்டதோடு கொலை அச்சுறுத்தல் விடுத்து நிலையில் மாங்குளம் பொலீஸாரின் உதவியுடன் தவசீலன் குறித்த இடத்தில் இருந்து வெளியேறியுள்ளார்.

காட்டுக்குள் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுவது மாத்திரமின்றி அங்கு வருகைதந்து யார் வீடியோ எடுக்க சென்னது என்றும் வீடியோ எடுக்க விடாது தடுத்து சட்டவிரோத மணலுடன் நின்ற உழவு இயந்திரத்தை அந்த இடத்தில் இருந்து எடுத்து சென்றதோடு ஊடகவியலாளருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

இதேவேளை சம்பவ இடத்திற்கு வந்த மாங்குளம் பொலிஸார் குறித்த காட்டுக்குள் செல்லும் வீதியை ஜேசிபி இயந்திரம் கொண்டு வெட்டி குறித்தகாட்டுக்குள்செல்லமுடியாதவாறு செய்துள்ளனர்.

இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பாக மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் ஊடகவியலாளர் சண்முகம் தவசீலனால் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. 316




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.02.2025இல் வெளியிடப்பெற்றது